# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2282/21 - 2022 මැයි මස 31 වැනි අඟහරුවාදා - 2022.05.31

*2282/21 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் பிரிவு 14 ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சரான ரணில் விக்ரமசிங்க ஆகிய என்னால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசியக் கொள்கை அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசியக் கொள்கை அமைச்சு,
கொழும்பு 01,
2020, மே 31.


1A - PG 5857 — 456 (2022/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்கு விதி முறைகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் **"2022 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்"** என அழைக்கப்படுகின்றது.

2. 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதிய 2270/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள் மற்றும் 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள், அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட இறக்குமதிகளுக்கு பாதிப்பு இல்லாமல் இத்தால் இரத்து செய்யப்படுகிறது.

3. மேலுள்ள ஒழுங்கு விதி இலக்கம் 02 இல் குறிப்பிட்டுள்ளப்படி, 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி முதல் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் 2022 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க அல்லது 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகளால் ஒழுங்குப்படுத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட எந்தவொரு பொருளும் (காகோ அல்லது கண்சயின்மட்) 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி முதல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) உரிமம் இல்லாமல் சுங்க சட்டத்தின் கீழ் விடுவிக்க சுங்க பணிப்பாளர் நாயகம் இதன் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

4. இந்த ஒழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டு, மே மாதம் 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

EOG 06 - 0036

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.